செ.வெ.எண்: 40 நாள்: 19.08.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் கீழையூர் வட்டம் மீனம்பநல்லூர் ஊராட்சியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் நுண்ணீர் பாசனம் சம்பா முனைப்பு இயக்கம் மற்றும் திரவ நானோ யூரியா செயல் விளக்கம் குறித்த முப்பெரும் விழாவினை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் கீழையூர் வட்டம் மீனம்பநல்லூர் ஊராட்சியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் நுண்ணீர் பாசனம் சம்பா முனைப்பு இயக்கம் மற்றும் திரவ நானோ யூரியா செயல் விளக்கம் குறித்த முப்பெரும் விழாவினை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.08.2021) தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் குறுவைத் தொகுப்பு திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் இதுவரை 10,950 ஏக்கர் பரப்பில் 10,711 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். அதன்படி கீழையூர் வட்டம் மீனம்பநல்லூர் கிராமத்தில் திரவ நானோ யூரியா பயன்படுத்தும் முறையை முதன்முதலாக தொடங்கப்பட்டுள்ளது.

மேலும், குறுவை பருவத்திற்கு தேவையான நேரடி கொள்முதல் நிலையங்கள் உரிய தருணத்தில் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நுண்ணீர் பாசன திட்டத்தின் மூலம் ரூ.3.86 கோடி மதிப்பீட்டில் 204.48 ஹெக்டேர் பயனடைந்துள்ளது. இம்மாத இறுதிக்குள் 600 ஹெக்டேர் சாதனை அடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நுண்ணீர் பாசனம் தேவைப்படும் விவசாயிகள் சம்மந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநர்களை அணுகி உரிய ஆவணங்களை வழங்கி தங்களது பெயரை முன்கூட்டியே பதிவு செய்து பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இரசாயன உரங்கள் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் கடைகளில் இருப்பு வைக்கப்பட்டு தட்டுப்பாடின்றி விவசாயிகளுக்கு கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அட்மா திட்டத்தின் மூலம் வெளி மாநில,

வெளி மாவட்ட, மாவட்டத்திற்குள்ளான பயிற்சி, கண்டுணர்வு சுற்றுலா, செயல் விளக்கங்கள், பண்ணைப் பள்ளி, வட்டார அளவிலான கண்காட்சி மற்றும் புதிய தொழில்நுட்பங்கள், காளாண் வளர்ப்பு குறித்த பயிற்சிகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. திரவ நானோ யூரியா என்ற புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் முறை குறித்து அனைத்து வட்டாரங்களிலும் விழிப்புணர்வு, செயல் விளக்கங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டத்தின் மூலம் 200 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு திருமருகல் மற்றும் கீழ்வேளுர் வட்டாரங்களில் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் மரக்கன்றுகள் நட்டு, குறுவை தொகுப்பு திட்டத்தின் மூலம் தக்கை பூண்டு பசுந்தால் உரத்தினையும், தோட்டக்கலை துறை சார்பில் காய்கறி விதைகளையும், திரவ நானோ யூரியா மருந்துகளையும் மற்றும் நானோ யூரியா மருந்து குறித்த மடிப்பேடுகளும் விவசாயிகளுக்கு வழங்கினார்.

இவ்விழாவில் கீழையூர் ஒன்றிய பெருந்தலைவர் திரு.ஞானசேகரன், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.சா.பன்னீர்செல்வம், தோட்டக்கலை இணை இயக்குநர் திருமதி.நா.கலா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.தனபால், நேர்முக உதவியாளர் திரு.சிவகுமார், வேளாண்மைத் துறை துணை இயக்குநர்கள், விவசாய பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**